

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கே.எஸ்.மூர்த்தி அவரது சொந்த கிராமமான நஞ்சப்பகவுண்டம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வாக்குச்சாவடி எண் 23 ல் தனது வாக்கினை செலுத்தினார்.



தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. தருமபுரி காந்திநகர் பகுதி வாக்குச் சாவடியில் தனது ஜனநாயக கடமையை ஆற்றினார்.



சேலம் மாவட்டம் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர். ஏ.கே.தருண் ரெட்டியூரில் உள்ள அரசு பள்ளியில் உள்ள வாக்கு சாவடியில் வாக்களித்தார்.



பாலக்கோடு சட்டமன்ற கழக வெற்றி வேட்பாளர் முன்னாள் எம்.பி டி.என்.வி.எஸ்.செந்தில்குமார் தருமபுரி காந்திநகர் பகுதி வாக்குசாவடியில் தனது ஜனநாயக கடமையை ஆற்றினார்.




நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் நாகை டாடா நகர் நகராட்சி தொடக்க பள்ளியில் வாக்களித்தார்.



மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ.,தரங்கம்பாடி பேரூராட்சி பொறையாரில் உள்ள ஜமாலியா அரசு உதவி பெறும் தொடக்க பள்ளியில் அமைக்கப்பட்டு இருந்த வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.




ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் துரைராஜ், முள்ளிக்கரும்பூர் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் உள்ள வாக்கு சாவடி மையத்தில் தனது வாக்குப்பதிவினை செலுத்தினார்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி தி.மு.க. வேட்பாளர் எஸ். பாலு வெடியரசம்பாளையம் வாக்குச்சாவடி மையம் எண். 193 ல் தனது வாக்கினை குடும்பத்தாருடன் பதிவு செய்தார்.



திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி கருப்பசாமி புதூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர், பர்கூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டி .மதியழகன் எம்.எல்.ஏ. தனது சொந்த கிராமமான குட்டூரில் உள்ள அரசு பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.



ஈரோடு வீரப்பன்சத்திரம் வாக்குச்சாவடியில் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர் சா.செந்தில்நாதன் தனது குடும்பத்துடன் சென்று தனது வாக்கினை பதிவு செய்தார்.



தருமபுரி சட்டமன்றத் தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தேமுதிக வேட்பாளர் டாக்டர்.இளங்கோவன் காந்தி நகர் வாக்குசாவடியில் தனது வாக்கினை செலுத்தினார்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூரில் மாநகர மேயரும் ஓசூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளருமான சத்யா தனது வாக்கினை பதிவு செய்தார்.



மாநில இளைஞரணி துணை செயலாளர் வேப்பனஅள்ளி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் பி.எஸ்.சீனிவாசன் தனது சொந்த கிராமமான பார்த்த கோட்டாவில் தனது வாக்கினை பதிவு செய்தார்.



அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியம் மஞ்சமேடு ஊராட்சி காரைப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் அரியலூர் தொகுதி திமுக வேட்பாளர் லதாபாலு தனது வாக்கை பதிவு செய்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பெங்களூர் வி.டி.சண்முகம்**
**ஏப்ரல் 24 (2018)**



தி.மு.கழகம் தொடங்கிய போதே, கர்நாடக மாநிலத்தில் தனது 12 வயதில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கி, 50 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினராகவும், கிளை கழகச் செயலாளராகவும், தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும், கர்நாடக மாநில அமைப்பாளராக, மாநில பொறுப்புக் குழுத் தலைவராக கழகப் பணியாற்றியவர்.

கருநாடக மாநிலத்தில் கழகத்திற்கென “கலைஞரகம்”எனும் மூன்று அடுக்கு மாடிக் கட்டிடத்தை பெங்களூர் இராமச்சந்திராபுரம் பகுதியில் கட்டுவதற்கு அரும்பாடுபட்டவர்.

பிரதமர் நேருவுக்கு கறுப்பு கொடி, இந்திரா காந்தி அம்மையாருக்கு எதிராக கறுப்பு கொடி, ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இரயில் மறியல் போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம் என கழகம் அறிவித்த பல போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**